# பெரும்பாக்கம் முதல்நிலை ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. **சுகாசினி ரங்கராஜன்**

க.ஊ.எண் : 154/24-25

நாள் 29/11/2024.

மு.மு.எண் : 3458/24

பொருள் : கட்டிட/மனை உட்பிரிவு வரைப்பட அனுமதி - பெரும்பாக்கம், ஊராட்சி 233/2, 233/2A2, 233/2A3, 233/2B2, 233/2B3 தெரு/ரோடு, புல எண். [illegible] மெயின் ரோடு மனைஎண் ...-...-... ஆகியவற்றில் கட்டிடம் / மனை உட்பிரிவு / சுற்றுச்சுவர் / கிணறு முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பார்வை : அரசு ஆணை எண். 255 நாள் 19.08.97 திரு/திருமதி K.Gopalakrishnan GPA & D.mohanraj & Devaraj அவர்களின் மனுநாள் 29/11/24.

**உத்திரவு :-** M/s. Hanu Homes.

திரு/திருமதி K.Gopalakrishnan GPA & D.mohanraj & Devaraj என்பவருக்கு பெரும்பாக்கம் கிராமம் புல எண் 233/2, 233/2A2 233/2A3, 233/2B2, 233/2B3. மனை எண்................... பெரும்பாக்கம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் கட்டிடம் / சுற்றுசுவர் / கிணறு / கழிப்பிடம் / குளியலறை / கடைகள் / முதல் தளம் / இரண்டாம் தளம் / பேருந்து வண்டிகள் நிறுத்துமிடம் / மனை உட்பிரிவு ஆகியவைகள் கட்டுவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது.............................ம் தேதி வரை ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும் அனுமதி கட்டணம் ரூ 60000/- (ரூபாய் [illegible] மட்டும்) செலுத்தியமைக்கான பல வகைப்பட்ட ரசீது எண் 655450 நாள் 29/11/24 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரை படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் வலது பக்கத்தில் 1.5 மீட்டருக்கு குறையாமலும், இடது பகுதியில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 3.00 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1995-ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமனம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்யவரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரை படங்களை காண்பிக்க வசதியான வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரை படங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5. இந்த உத்திரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்காவிட்டால் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதெனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் / நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்திரவு பெற் பிறகு தான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

7. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவே அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு உரிமை உண்டு.

8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.

9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடி புக வேண்டும்.

10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறபடுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படயிருந்தால் அவைகளுக்கு மாவட்ட அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர், செயலாளர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஆகியோரிடமிருந்து அனுமதி பெற்றிருந்தல் வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தலைவர்
பெரும்பாக்கம் முதல்நிலை ஊராட்சி

தலைவர் / நிர்வாக அதிகாரி
பெரும்பாக்கம் முதல்நிலை ஊராட்சி, சென்னை - 600 100.

29/11/24

பெறுநர்

திரு/திருமதி m/s Hanu Homes Partner.
Thiru K. Gopalakrishnan GPA for
Thiru D. Mohanraj & Devaraj.
No: 9. JayaChandiran Nagar. main Road.
Jalladian pet. Chennai - 600100.

**அனுப்புநர்**

திரு.எம்.வெங்கட்ராகவன்
ஆணையாளர்,
புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்
(இ)சிட்லபாக்கம்.

**பெறுநர்**

ஊராட்சி மன்ற தலைவர்,
பெரும்பாக்கம் ஊராட்சி,
புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்.

ந.க.எண்.3458/2024/அ4 நாள்.22.11.2024

ஐயா,

பொருள் - திட்ட அனுமதி - செங்கல்பட்டு மாவட்டம் - புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் - பெரும்பாக்கம் ஊராட்சி The Planning Permission for the proposed construction of Ground floor (Part) / Stilt floor (Part) + 4 Floors + 5th Floor (Part) Height - 18.30m) Residential Cum Commercial Building with 26 dwelling Units (GF (Pt) & 1F (Pt) - Office - 215.15 sq.m) at availing premium FSI at Nookampalayam Main Road, Perumbakkam, Chennai Comprised in Old S.No.233/2, New S.No.233/2A2, 233/2A3, 233/2B2 and 233/2B3 of Perumbakkam Village within the limit of St.Thomas Mount Panchayat Union - கட்டிடம் கட்டுவதற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் திட்ட அனுமதி ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது - இறுதி ஒப்புதல் வழங்க கோருதல் சார்ந்து.

பார்வை - 1) உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், எண்.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை - 600 008. அவர்களின் Letter No.CMDA/PP/NHRB/S/0269/2024, Dated: 23.08.2024..

2) அரசாணை எண்.295 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (I2) துறை நாள்.17.12.2013.

3)ஆணையாளர், புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித ந.க.எண்.3458/2024/அ4 நாள்.18.11.2024.

4 M/s. Hanu Homes, Rep by its partner Thiru.K.Gopalakrishnan GPA for Thiru.D. Mohanraj & Devaraj No.9D, Jayachandran Nagar 3rd Main Road Jalladianpet, Chennai - 600 010, என்பவர் செலுத்திய தொழிலாளர் நல நிதி ரூ.4,44,500/- (DD No.021772 & 021777 Axis Bank, date.19.11.2024 & 22.11.2024

5) திட்ட அனுமதி அளிக்கப்பட்ட வரைபடங்கள்.

6) தொடர்புடைய ஆவணங்கள்.

******

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி, செங்கல்பட்டு மாவட்டம், புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சி, The Planning Permission for the proposed construction of Ground floor (Part) / Stilt floor (Part) + 4 Floors + 5th Floor (Part) Height - 18.30m) Residential Cum Commercial Building with 26 dwelling Units (GF (Pt) & 1F (Pt) - Office - 215.15 sq.m) at availing premium FSI at Nookampalayam Main Road, Perumbakkam, Chennai Comprised in Old S.No.233/2, New S.No.233/2A2, 233/2A3, 233/2B2 and 233/2B3 of Perumbakkam Village within the limit of St.Thomas Mount Panchayat Union, M/s. Hanu Homes, Rep by its partner Thiru.K.Gopalakrishnan GPA for Thiru.D. Mohanraj & Devaraj No.9D, Jayachandran Nagar 3rd Main Road Jalladianpet, Chennai -

600 010. என்பவருக்கு உள்ளாட்சி அமைப்பு மூலம் ஒப்புதல் பெற்று கட்டிடம் கட்டுவதற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் திட்ட அனுமதி மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் அரசாணையின்படி மேற்படி மனுதாருக்கு தொழிலாளர் நல நிதி செலுத்த கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டதில் பார்வை 4ல் காணும் விவரப்படி தொழிலாளர் நல நிதி ரூ.4,44,000/- (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) வங்கி வரைவாக Manual Workers General Welfare Fund Of TNCWW Board at Chennai என்ற பெயரில் செலுத்துப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட திட்ட அனுமதி வரைபடங்கள் மற்றும் பர்மிட் அசலாக இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. மேற்படி மனுதாரரிடம் உரிய கட்டணங்களை வங்கி வரைவாக அரசு விதிமுறைகளின்படி வசூலிப்பதுடன் பார்வை 1ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு இறுதி ஒப்புதல் வழங்க தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு** -

1.திட்ட அனுமதி அளிக்கப்பட்ட வரைபடம் (அசல்)
2.திட்ட அனுமதி பர்மிட் (அசல்)
3.பார்வை 1ல் காணும் கடித நகல்.

ஆணையாளர்,
புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்,
(இ) சிட்லபாக்கம்.

**நகல்**

1)உறுப்பினர் செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
எண்.1 காந்தி இர்வின் சாலை
எழும்பூர், சென்னை -600 008.

2 M/s. Hanu Homes,
Rep by its partner Thiru.K.Gopalakrishnan GPA for
Thiru.D. Mohanraj & Devaraj
No.9D, Jayachandran Nagar 3rd Main Road,
Jalladianpet, Chennai - 600 010.
(பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களை அணுகி ஒப்புதல் பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.)